TNTP120001462016

Presented on : 17-08-2016
Registered on : 17-08-2016
Decided on : 15-06-2026
Duration : 9 years, 9 months, 29 days

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்
முன்னிலை. திரு தி.அன்பு, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 15 ம் நாள் திங்கள்கிழமை
**அசல் வழக்கு எண்.116/2016**

1. தியாகராஜன்
2. காமராஜ்
3. பன்னீர்செல்வம் ( இறந்துவிட்டார்)

வாதிகள் துறையூர் வட்டம், உப்பிலியபுரம் கிராமத்தில் அமைந்துள்ள நாடார்கள் மாசி மலையான் கோவிலின் குடிபடைகளின் பிரதிநிதிகள் என்ற ஹோதாவிலும்

.. வாதிகள்

/எதிர்/

1. நாகராஜ்
2. செந்தில்குமார்
3. அசோக்குமார்

. பிரதிவாதிகள்

இவ்வழக்கானது என்முன்பாக கடந்த 10.06.2026 ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு ஜி.விவேக்ராஜா அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு கே.ரத்தினம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள், சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:12:21 +0530

**தீர்ப்புரை**

வாதிகள் தாவாச்சொத்தில் உள்ள நாடார்கள் மாசிமலையான் போவிலை சாமி கும்பிட்டுக்கொண்டு அனுபவம் செய்துவருவதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, வாரிசுகளோ தாவாச்சொத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டவோ, வீடு கட்டவோ அல்லது வேறு வகையிலோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்**.

தாவாச்சொத்தில் ஆதியில் நாடார் இன மக்களில் வாதிகளின் பங்காளிகளும், வாதிகளின் குடும்பத்தாரும் தங்களது குல தெய்வமான மாசிமலையான் என்ற தெய்வ உருவை வைத்து சுமார் 80 வருடங்களுக்கு மேலாக கும்பிட்டுக்கொண்டு வருகின்றனர். தாவா சொத்தில் மாசிமலையான் தெய்வத்திற்காக வேலும், சிறிய வடிவிலான பதிவும் அமைத்து அதில் தெய்வத்தினுடைய வழிபாட்டின் பேரில் நம்பிக்கை கொண்டு ஒரு பெரிய அரசமரமும் அமைக்கப்பட்டு, தாவாச்சொத்தில் வாதிகளும், வாதிகளின் பங்காளிகளும் விருப்பம் போல் வந்து சாமி குடும்பிடுவது வழக்கம்.

3. தாவாச்சொத்தில் உள்ள மாசிமலையான் கோவிலில் அவ்வப்போது வாதிகளின் பங்காளிகளும், வாதிகளும் ஒன்று கூடி சாமிக்கு கெடா வெட்டியும், பொங்கள் வைத்தும் பூஜை செய்து, சாமி கும்பிடுவது வழக்கம். அதனால் தாவாச்சொத்தும் ஆதியிலிருந்து காலிமனையாகவே இருந்து வருகின்றது. வாதிகளும், வாதிகளின் பங்காளிகளும் மரம் ஏறும் தொழிலும், கீற்று பின்னும் தொழிலும் செய்து வந்து தற்காலம் வாதிகளும் டைலர், டிரைவர் ஆகிய தொழில்களில் ஈடுபட்டு வந்தாலும், தங்களது குலத்தொழிலான கீற்று தொழில் செய்து வருகின்றார்கள். எனவே, வாதிகளாலும், வாதிகளின் முன்னோர்களாலும் தாவாச்சொத்தில் பெரிய கோவிலாக கட்ட வாய்ப்பு ஏற்படவில்லை. எனினும் தாவாச்சொத்தில் உள்ள மாசிமலையான் கோவிலில் தங்களது குலதெய்வ வழிபாட்டை தவறாமல் வழிபட்டு வந்துள்ளனர்.

4. தாவாச்சொத்தின் சர்வே எண்.294/94 ஆகும். தாவாச்சொத்தை வாதிகளின் முன்னோர்கள் சுமார் 80 வருடங்களுக்கு மேலாக மேற்படி

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.15 19:12:30 +0530

தெய்வங்களை வைத்து வழிபட்டி வருவதால் தற்காலம் இந்த வாதிகள் வசம் தாவாச்சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்கள் ஏதுமில்லை. தாவாச்சொத்தும் வாதிகளின் கோவிலுக்கு அவரது முன்னோர்களால் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். தாவாச்சொத்துக்களை வாதிகளும், வாதிகளின் முன்னோர்களும் தெய்வ வழிபாடு செய்து வந்துள்ளார்கள்.

5. 1ம் பிரதிவாதியும் கடந்த 02.05.1997 ம்தேதியன்று உப்பிலியபுரம் கிராமத்தில் வசித்த வெங்கட்ராம செட்டியார் மகன் நாகமையா செட்டியார் என்பவரிடமிருந்து அவருக்கு பாத்தியப்பட்ட நத்தம் சர்வே எண்.208/5எ ஏக்கர் 18.59ல் கிழமேல் வீதிக்கும்வடக்கு, நாடார் கோவில் வீட்டு வாசலுக்கும் தெற்கு, தென்வடல் சந்து பாதைக்கும் மேற்கு, மற்றும் நாடார்கள் மாசிமலையான் கோவிலுக்கும் கிழக்கு, என கண்டு கிழமேல் ஜாதியடி 12, தென்வடல ஜாதியடி 20 உள்ள 240 சதுரடி மனையும் அதில் உள்ள கூரைவீட்டையும் சேர்த்து கிரையம் பெற்றுள்ளார். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள நான்கெல்லையில் நாடார் கோவில் வீட்டு வாசலுக்கும் தெற்கு, நாடார்கள் மாலிமனையான் கோவிலுக்கும் கிழக்கு என்று அவரது கிரையப்பத்திரத்தில் கண்டுள்ளது தாவாச்சொத்து குறிக்கக்கூடிய நான்கெல்லைகள் ஆகும்.

6. 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த நாகமையா செட்டியார் கடந்த 18.11.1975ம் தேதியன்று பெரியசாமி ஆசாரியார் மகன் முருகேசன் ஆசாரியாரிடமிருந்து 1ம் பிரதிவாதிகிரையம் பெற்ற சொத்துக்களை கிழமேல் வீதிக்கும் வடக்கு, நாடார்கள் கோவில் வீட்டு வாசலுக்கும்தெற்கு, தென்வடல் சந்து பாதைக்கும் மேற்கு, மற்றும் நாடார்கள மாலிமலையான் கோவிலுக்கும் கிழக்கு என கண்டு கிழமேல் ஜாதியடி 20, தென்வடல் ஜாதியடி 12 என கண்டு கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி பத்திரத்திலும் நாடார்கள் கோவில் வீட்டு வாசலுக்கும் தெற்கு, நாடார்கள் மாசிமலையான் கோவிலுக்கும் கிழக்குஎன நான்கெல்லைகளில் கண்டிருப்பது தாவாச்சொத்தை குறிப்பதாகும்.

7. கடந்த 05.03.1971ம் தேதியன்று மீனாட்சியம்மாளுக்கு தனலட்சுமி ஆசாரி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்திலும் நாடார் கோவில் வீட்டு வாசலுக்கும் தெற்கு, நாடார் மாசிமலையான்

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.15 19:12:39 +0530

கோவிலுக்கும் கிழக்கு என நான்கெல்லைகள் கண்டு எழுதிக்கொடுத்துள்ளார். அந்த வகையில் 1ம் பிரதிவாதி தான்பெற்ற கிரையப்பத்திரத்தின் அடிப்படையிலும், அவரது மூல ஆவணங்களின் அடிப்படையிலும், தாவாச்சொத்துக்கள் நடார் மாசிமலையான் கோவிலுக்கு சொந்தமாக பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்பது தெள்ளத்தெளிவாக தெரியவருகிறது.

8. கடந்த 09.09.1966ம் தேதியன்று சன்னாசி (எ) பெரியசாமி பிள்ளை மனைவி அமிர்தம்மாளுக்கு நாகப்பிள்ளை மகன் ஆறுமுகப்பிள்ளை எழுதிக்கொடுத்த இனாம் சானப்பத்திரத்திலும் மாசிமலையான் கோவிலுக்கு வடக்கு என நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 07.03.1955ம் தேதியன்று ஆறுமுகத்திற்கும் அவரது குடும்பத்தார்கள் செய்துகொண்ட பாகப்பத்திரத்தின்படி பாத்தியப்பட்டு, அவரது மனைவி அமிர்தம்மாளுக்கு இனாம் சாசனம் எழுதிக்கொடுள்ளார். அதிலும் மாசிமலையான் கோவிலுக்கு வடக்கு என நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களில் இருந்து தாவாச்சொத்து மாசிமலையான் கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது தெளிவாகிறது. கடந்த 06.12.1969ம் தேதி நீலப்ப ரெட்டியார் மகன் ராமராஜ் ரெட்டியார் என்பவரிடம் சொத்தை கிரையம் பெறும்பொழுது மாசிமலையான் கோவிலுக்கு வடக்கு என நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது.

9. தாவாச்சொத்தின் மேல்புற எல்லைதாரர் முத்துசாமி செட்டியார் மகன் முத்து வரதராஜுலு ரெட்டியார் தனக்கு பாத்தியப்பட்டசொத்துக்களை அவரது பேரனுக்கு கடந்த 15.02.1962ம் தேதியன்று ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார். அதிலும் சானார் கோவிலுக்கும், எங்கள் கூரைவாரிக்கும் மேற்கு என்று அடையாளம் கண்டு பாத்தியப்படுத்தியுள்ளார். அதேபோன்று கடந்த 13.10.1936ம் தேதியன்று இனச்சேர்க்கையாக அதனை ஒட்டியுள்ள மற்றொரு சொத்தையும் கிரையம் பெறும்பொழுது சானார் கோவிலுக்கு மேற்கு என தாவாச்சொத்தினை அடையாளம் கண்டு கிரையப்பத்திரம் எழுதியுள்ளார்.

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.15 19:12:47 +0530

10. மேற்கண்ட ஆவணங்களில் இருந்துதாவாச்சொத்தில் நாடார் இன மக்களின் மாசிமலையான் கோவில் அமைந்திருப்பது தெள்ளத்தெளிவாக தெரியவரும். நாடார்கள் என்பதும் சாணார்கள் என்பதும் ஒரே வகையானவர்கள் என்பதால், முத்துவரதராஜுலு செட்டியார் தனது கிரையப்பத்திரங்களில் சாணார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். தற்காலம் வருவாய்த்துறை கணக்குகளில் நத்தம் காலிமனை என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. 1,2 பிரதிவாதிகளுக்கு தாவாச்சொத்தில் எவ்வித பாத்தியமும், உரிமையும் இல்லை. 1,2 பிரதிவாதிகளுக்கு உப்பிலியபுரம் கிராம நத்தம் சர்வே எண்.294/95 ல் அமைந்துள்ளது. 3 ம் பிரதிவாதிக்கு உப்பிலியபுரம் கிராம நத்தம் சர்வே எண்.294/93 ல் அமைந்துள்ளது. 1,2,3 பிரதிவாதிகள் தங்கள் கிரையப்பத்திரங்களுக்கு விரோதமாகவும், வருவாய்த்துறை கணக்குகளில் அவர்களுக்கு வகைபாடு செய்யப்பட்டுள்ள அளவுகளுக்கு அதிகமாகவும் தாவாச்சொத்தில் எவ்வித உரிமையும் கோரமுடியாது. தாவாச்சொத்தில் வாதிகளின் பங்காளிகள் நாடார்களின் மாசிமலையான் கோவில் என்ற வகையில் அதன் பிரதிநிதிகள் என்ற ஹோதாவில் வழக்கினை தாக்கல் தனியாக ஒரு மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் தாவாச்சொத்தில் நாடார்களின் மாசிமலையான் கோவில் என்ற வகையில் தெய்வவழிபாடு செய்து வருவதால் தாவாச்சொத்தில் வாதிகளின் அனுபவமும், உரிமையும், பாத்தியமும் உள்ளது.

11. தாவாச்சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி பிரவேசித்து கட்டிடம் கட்ட கடந்த 10.08.2016 ம் தேதி முதல் ஏற்பாடு செய்து வருகின்றனர். அதனை வாதிகள் தடுத்துவிட்டனர். அதனால் பிரதிவாதிகள் கடந்த 11.08.2016 ம் தேதி முதல் தாவாச்சொத்தில் அத்துமீறி வீடுகட்டவும், சுவர் வைக்கவும் ஏற்பாடு செய்து வாதிகளுக்கு அவரது மாசிமலையான் கோவிலின் குடிபடைகளின் பிரதிநிதிகள் என்ற ஹோதாவில் இருப்பதை இடையூறு செய்வதால் இவ்வழக்கினை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள்.

12. **பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்**

வாதியின் வழக்கு பொய்யும், புரட்டும், மோசடியுமாகும். வாதிகள் பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்வதற்கு வாதிகளுக்கு அறவே எவ்வித உரிமையும் இல்லை. வாதிகள் பிரதிநிதித்துவ

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.15 19:12:56 +0530

அடிப்படையில் ஒரு வழக்கினை தாக்கல் செய்வதற்கு கட்டளை 1 விதி 8ன் படி மனு தாக்கல் செய்து பேப்பர் நாளிதழில் விளம்பரம் செய்து, பிரதிநிதிகள் ஹோதாவில் இவ்வழக்கினை தாக்கல் செய்வதற்கு ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா? என குடிப்படைகளிடமும், அரசிடமும் அனுமதி பெறவேண்டும். மேலும் வழக்கு தாக்கல் செய்யும் இடம், வாதிகளுக்கு சொந்தமான உரிமை உள்ளதாக இருக்கவேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர வாதிகளுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை. மேலும் தாவாச்சொத்தானது வருவாய்த்துறை ஆவணங்களில் காலிமனை என்றே வகைபாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசு காலிமனையினை ஆக்கிரமித்து அனுபோகம் செய்வதற்கு சொத்துக்கருகில் குடியிருந்து வரும் பிரதிவாதிகளுக்கு சகல அனுபோக பாத்தியமும், உரிமையும் தாவாச்சொத்தில் நீண்ட நெடுங்காலமாக சித்தித்துள்ளது.

13. தாவாச்சொத்தினை அண்டை பாத்திய முறையில் அனுபோகம் செய்வதற்கு இந்த பிரதிவாதிகளுக்கே முழு உரிமையும் உள்ளது. அதனை தடை செய்யவோ, ஆட்சேபனை செய்யவோ வாதிகளுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை. வாதிகள் இவ்வழக்கினை தாக்கல் செய்வதற்கும், தாவாச்சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கும் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. அரசு நத்தம் காலிமனையினை ஆக்கிரமித்து அனுபோகம் செய்து வரும் இந்த பிரதிவாதிகளுக்கு முறையான விசாரணை செய்து பட்டா வழங்குவதற்கு அரசுக்கு உரிமையுள்ளது. அதனை தடை செய்வதற்கு வாதிகளுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை.

14. வாதிகள் இவ்வழக்கினை உப்பிலியபுரம் கிராமத்தில் அமைந்துள்ள நாடார்கள் மாசி மலையான் கோவிலின் குடிபடைகளின் பிரதிநதிகள் என்று சொல்லிக்கொண்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். தாவாச்சொத்தில் வாதிகள் சொல்வதுபோல் எவ்வித கோவிலும் இல்லை. தாவாச்சொத்தும் நாளது வரையில் காலிமனையாகவே உள்ளது. தாவாச்சொத்தானது காலிமனை என வகைபாடு செய்யப்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளனர். 1938ம் வருடத்தில் சானார் கோவில் இடம்என்று எழுதியுள்ளதைவைத்து அதற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்களும் அதனடிப்படையில் சானார்கள் கோவில் என்றும், பின்னிட்டு நாடார்கள் கோவில் என்றும்

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:13:04 +0530

நான்கெல்லைகள் கண்டு எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு எவ்வித கோவிலும் நாளது வரையில் பூஸ்துதியில் இல்லை. பழைய ஆவணங்களில் தவறுதலாக நான்கெல்லைகள் கண்டு வழிமுறையாக எழுதப்பட்டுள்ளதை வைத்து தாவாச்சொத்தில் உரிமை கோருவதற்கு வாதிகளுக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை.

15. வாதிகள் துறையூர் வட்டம், உப்பிலியபுரம் கிராமத்தில் அமைந்துள்ள நாடார்கள் மாசிமலையான் கோவிலின் குடிபடைகளின் பிரதிநிதிகள் அல்ல. மேலும் தாவாச்சொத்தில் எவ்வித நாடர்களுக்கு சொந்தமான எவ்வித கோவிலும் இல்லை. 1ம் வாதியின் தம்பி 2ம் வாதி ஆவார். எனவே, இவர்கள் பிரதிநிதிகள் அல்ல. வருவாய்த்துறையில் பொய்யான சங்கதிகளை சொல்லி வாதிகள் பெயரில் தாவாச்சொத்திற்கு பட்டா பெற முயற்சி செய்தனர். அதனை 3ம் பிரதிவாதி 19.11.2015ம் தேதி வருவாய்த்துறை உயர் அதிகாரிகளுக்கு புகார் மனு செய்து அதனடிப்படையில் தாவாச்சொத்தினை தாவாச்சொத்தினைப் பொறுத்து வருவாய்த்துறையில் விசாரணையும் நிலுவையில் இருந்து வருகிறது. வாதிகள் தாவாச்சொத்து காலிமனையாக உள்ளதை அபகரிக்கும் எண்ணத்துடன் எவ்வித உரிமையும் இல்லாமல் வருவாய்த்துறையில் புகலாக பட்டா பெற்று கிரையம் செய்ய ஏற்பாடு செய்ய முயற்சிகள் மேற்கொண்டதை இந்த பிரதிவாதிகள் தடுத்துவிட்டதால் மனவிரோதத்தின் பேரில் வேண்டுமென்றே இவ்வழக்கை பிரதிவாதிகள் மீது வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள்.

16. தாவாச்சொத்தானது காலிமனையாக உள்ளதை வாதிகள் அவர்களுக்கு சொந்தமாக்கிகொள்வதற்கு விளம்புகை பரிகாரம் கோராமல் இந்த பிரதிவாதிகள் பெயரில் வெறுமனே தடை உத்தரவு பரிகாரம் கோருவதற்கு சட்ட வழிவகையில்லை. தாவாச்சொத்தின் உரிமையாளரான வருவாய்த்துறையினை வழக்கில் சேர்க்காமல் வாதிகள் மட்டும் பிரதிவாதிகளுக்கு எதிராக பரிகாரம் கோர இயலாது. இவ்வழக்கு 1,2 பிரதிவாதிகள் நாடார் இன மக்களே ஆவார்கள். எனவே தாக்கல் சொத்தில் வாதிகள் உரிமை கொண்டாடுவதை தடை செய்வதற்கு இந்த பிரதிவாதிகளுக்கு முழு உரிமை உள்ளது.

17. 1 முதல் 9 ஆவணங்களின் நான்கெல்லைகளில் சானார் கோவில் என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளதாலேயே வாதிகளின்

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:13:13 +0530

குடிப்படைகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துதான் என்பதை நிரூபணம் செய்வதற்கு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. அதன் அடிப்படையில் உரிமை இல்லாத சொத்தில் வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித தடை உத்தரவும் கோர இயலாது. தாவாச்சொத்திற்கு அருகில் நத்தம் சர்வே எண்.294/95, 294/93 ஆகியவற்றில் பிரதிவாதிகளுக்கு இடம் உள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. தாவாச்சொத்திற்கு அருகில் உள்ள பிரதிவாதிகள் அரசுக்கு சொந்தமான தாவாச்சொத்தை அண்டை பாத்திய முறையில் அடைந்து அனுபோகம் செய்து வருவதை தடை செய்வதற்கு வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. எனவே, தாவாச்சொத்தின் உரிமையாளர் அல்லாத இவ்வழக்கு வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராககேட்டுள்ளபரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல. எனவே, இவ்வழக்கும் தள்ளுபடி செய்யப்படவேண்டும். தாவா காலிமனையில் ஏதேனும் ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை அரசுதான்சட்டமுறையில் அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். வாதிகள் பட்டா பெறுவதை பிரதிவாதிகள் புகார் செய்து தடுத்து நிறுத்திவிட்டதால், யூகத்தின் அடிப்படையில் தாவாச்சொத்தினை ஆக்கிரமிக்க போவதாக வாதிகள், பிரதிவாதிகளுக்கு எதிராக வேண்டுமென்றே வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அரசுக்கு சொந்தமான தாவாச்சொத்தினை அகபரிக்க வாதிகள் ஏதோ மாசிமலையான் கோவிலின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு, பிரதிவாதிகளுக்கு எதிராக தடை உத்தரவு பெற்றுக்கொண்டு அதனை வைத்துக்கொண்டு வருவாய்த்துறையில் வாதிகள் பெயரில் பட்டா பெற்று அதிக விலைக்கு கிரையம் செய்து துர்லாம் அடையவேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை. சொல்லியுள்ள வழக்குமூலம் தவறு. அந்த வகையில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

18. .வாதியின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை, ஆகியவற்றினை ஆய்ந்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டன.

1. வாதிகளுக்கு பிரதிநிதி என்ற தகுதியில் வழக்கை தொடர உரிமை இல்லை என்பது உண்மையா?
2. வாதிகளுக்கு தாவாப்படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.15 19:13:22 +0530

3. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன?

19. வாதிகளின் தரப்பில் 1ம்வாதி தியாகராஜன் வா.சா.1 ஆகவும், பன்னீர்செல்வம் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி நாகராஜ் பி.வா.சா.1 ஆகவும், 2ம் பிரதிவாதி செந்தில்குமார் பி.வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். சான்றாணவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

20. வாதிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எழுத்துமூலமான வாதுரையினை தாக்கல் செய்து வாதிட்டார். தாவா சொத்தில் வாதிகள், வாதிகள் குடும்பத்தார்கள் மற்றும் வாதிகளின் பங்காளிகள் தங்களது குல தெய்வமான மாசிமலையான் என்ற தெய்வ உருவை வைத்து வழிபட்டு வந்துள்ளார்கள். தாவா சொத்தில் ஒரு பெரிய அரச மரமும், வேலும், பதுவும் அமைத்து தெய்வத்தினுடைய வழிபாட்டின்பேரில் நம்பிக்கை கொண்டு, சாமிக்கு கிடா வெட்டியும், பொங்கல் வைத்தும், பூஜைகள் செய்தும் வந்துள்ளார்கள். தாவா சொத்தில் வாதிகள் தெய்வ வழிபாடு கடந்த சுமார் 90 வருடங்களாக செய்து வருவது சாட்சிகளின் குறுக்கு விசாரணையில் தெள்ளத்தெளிவாக தெரிய வந்துள்ளது. பிரதிவாதிகள் கிரையம் பெற்ற ஆவணங்களிலும், அவர்களுக்கு முன்பு இரையம் பெற்ற நபர்களின் கிரையப்பத்திரங்களிலும் நாடார்கள் அல்லது சாணார்கள் மாசிமலையான் கோவிலை குறிப்பிட்டுதான் நான்கெல்லைகள் பதியப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்கள் வா.சா. 1 முதல் 9 வரை மாண்புமிகு நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலுவையில் வாதிகள் இருக்கும்போது 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பத்திரத்திலும், மாசிமலையான் கோவிலுக்கு வடக்கு என்று குறிப்பிட்டுதான் பத்திரம் பதியப்பட்டுள்ளது. அதை தனது குறுக்குவிசாரணையின்போது 2ம் பிரதிவாதி ஒத்துக்கொண்டுள்ளார்.

21. தாவாச்சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிக் முயற்சி செய்து பிறகு நீதிமன்ற உத்தரவு தெரிந்தவுடன் காலி செய்துவிட்டதாக 1ம் பிரதிவாதி குறுக்கு விசாரணையின்போது தெள்ளத்தெளிவாக ஒப்புக்கொண்டார். தாவாச்சொத்தில் நாடார்கள் மாசிமலையான் கோவில் உள்ளது என்றும், அதில் பூஜைகள் மற்றும் சாமி கும்பிட்டு

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.15 19:13:32 +0530

கிடா வெட்டி வழிபட்டு வருவதையும் குறுக்கு விசாரணையின்போது 1,2 பிரதிவாதிகள் ஒத்துக்கொண்டுள்ளார்கள். 1ம் பிரதிவாதி தாவாச்சொத்தில் அரசமரம் இருந்ததையும், வாதிகளும், வாதிகளின் பங்காளிகளுக்கு மட்டும்தான் மாசிமலையான் குலதெய்வம் அது தாவாச்சொத்தில் உள்ளது என்றும், குறுக்கு விசாரணையில் பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் கிரையம் பெற்ற ஆவணங்களிலும், நாடார்கள் மாசிமலையான் கோவிலை நான்கெல்லை குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றுள்ளார்கள். வழக்கு நிலுவையில் உள்ள நிலையிலும் அதாவது கடந்த 2024ம் ஆண்டு 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணங்களிலும் மாசிமலையான் கோவிலை குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றுள்ளார்.அரசு வருவாய்த்துறை ஆவணங்களில் காலிமனை என்று குறிப்பிடிட்டிருப்பதால் தாவாச்சொத்தில் கோவில் இல்லை என்று கூறமுடியாது. மேலும் வாதிகள் தனிப்பட்ட முறையில் ஆவணங்கள் எதுவும் கேட்காத காரணத்தால் விளம்புகை பரிகாரமோ, அரசு அதிகாரிகளை தரப்பினர்களாக சேர்க்கவேண்டியது இல்லை. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவாச்சொத்தில் கோவில் இல்லை என்று கட்சி செய்துவிட்டு, குறுக்கு விசாரணையில் வழக்கு தாக்கல் செய்த பிறகு வழிபட்டு வருவதாகவும், பூஜைகள் செய்து வருவதாகவும், கிடா வெட்டி வழிபட்டு வருவதாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். அதேபோன்று 3ம் பிரதிவாதி வாதிகள் பெயரில் பட்டா பெறுவதை தடுக்கும்விதமாக வருவாய்த்துறையில் மனு கொடுத்ததாக கூறியுள்ளார்கள். அதற்கான ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. அந்த வகையில் தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என வாதிட்டார்.

22. பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தாவா சொத்தும் ஆதியில் இருந்து காலிமனையாகவே இருந்து வருகிறது என்று வழக்குரையில் குறிப்பிட்டு வாதிகள் ஒத்துக்கொண்டுள்ளனர். தாவா சொத்தின் சர்வே எண் 294/94 என்றும் இது காலி மனையாகத்தான் இருக்கிறது என்று வாதிகள் வழக்குரையில் குறிப்பிட்டு ஒத்துக்கொண்டுள்ளனர். தற்காலம் இந்த வாதிகள் வசம் தாவா சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்கள் ஏதும் இல்லை என்றும், வழக்குரையில் குறிப்பிட்டு ஒத்துக்கொண்டுள்ளனர். வருவாய்துறை கணக்குகளில் நத்தம் காலிமனை என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிகள் ஒத்துக்கொண்டுள்ளனர்.

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:13:43 +0530

வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள புலவரைபடத்திலும் சர்வே எண் : 294/94 என்பது காலிமனை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும், வாதிகள் ஒத்துக்கொண்டுள்ளனர். வாதிகள் தற்போதுதான் பட்டா கேட்டு வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளனர் என்றும் வழக்குரையில் குறிப்பிட்டு ஒத்துக்கொண்டுள்ளனர். மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களை முன்னிட்டு தாவா சொத்தை பொறுத்து வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பது உறுதியாகிறது. வாதிககள வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்துவிபரமும் பொய்யானது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1 முதல் 9 வரையிலான ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள நான்கெல்லை விவரத்திற்கும், வருவாய்த்துறை ஆவணங்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. அதாவது பதிவுத்துறை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லைகள் விவரம் வருவாய்துறை ஆவணங்களோடு ஒத்துவராத ஆவணங்கள் ஆகும். எனவே வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் உறுதிசெய்யப்பட்டவை அல்ல அவை செல்லதக்கதல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு எவ்வித அனுபவமும் இல்லை.

23. தாவா சொத்து வருவாய்த்துறை கணக்குகளில் காலி மனை என்றும். அது நாளது வரை நடைமுறையில் இருக்கும்போது வாதிகள் தாவா இடத்தில் அனுபவம் செய்து வந்தார்கள் என்பது பொய்யான சங்கதிகளாகும். தாவாச்சொத்தை வாதிகள் அபகரிக்க முயற்சி செய்கிறார்கள் என்பதுதான் உண்மை. வாதிகள் பிரதிநிதிகள் என்ற கோதாவில் தனியாக ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்படும் விவரம் பிரதிவாதிகளுக்கு தெரியாது. தாவா சொத்தானது வருவாய் துறை ஆவணங்களில் காலிமனை என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் அரசு காலிமனையினை ஆக்கிரமித்து அனுபோகம் செய்வதற்கு மேற்படி சொத்துக்கு அருகில் குடியிருந்து வரும் பிரதிவாதிகளுக்கு சகல அனுபோக பாத்தியமும், உரிமையும் நீண்ட நெடுங்காலமாக சித்தித்துள்ளது. தாவா சொத்தில் வாதிகள் தங்களுடைய வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதுபோல தாவா இடத்தில் எவ்வித கோவிலும் இல்லை. நாளதுவரை காலிமனையாகவே உள்ளது. அதனை வாதிகள் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:13:54 +0530

24. வாதிகள் வருவாய்த்துறையில் பொய்யான சங்கதிகளை சொல்லி தாவா சொத்திற்கு பட்டா பெற முயற்சி செய்தனர். அதனை 3 ம் பிரதிவாதி 19.11.2015 ம் தேதி உயர் அதிகாரிகளுக்கு வாதிகளின் சட்டவிரோத செயல்களை தடுத்து நிறுத்திவிட்டனர். அதனால் ஏற்பட்ட விரோதத்தில் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். இந்த் வழக்கில் வருவாய்துறையினரை வழக்கில் சேர்க்காமல் வாதிகள் மட்டும் எதிர்வாதிகளுக்கு பரிகாரம் கோர இயலாது. தாவா சொத்து வாதிகளின் குடிபடைகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துதான் என்பதனை நிரூபனம் செய்வதற்கு எவ்வித ஆவணமும் இல்லை

25. தாவா சொத்துக்கு அருகில் நத்தம் சர்வே 294/95, 294/93 நெம்பர்களில் இந்த எதிர்வாதிகளுக்கு இடம் ஒத்துக்கொள்ளப்படுகிறது எனவே தாவா சொத்தினை பிரதவாதிகள் தாவா சொ்தினை அண்டைபாத்திய முறையில் அடைந்து அனுபோகம் செய்வதை தடைசெய்வதற்கு இந்த வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு எவ்வித அடிப்படை முகாந்திரமும் இல்லை. எனவே, வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என வாதிட்டார்.

26. <u>**எழுவினா. 1**</u>

**வாதிகள் இவ்வழக்கை பிரதிநிதித்துவ கோதாவில் வழக்கு தாக்கல் செய்ய உரிமை இல்லை என சொல்வது உண்மையா? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:-**

இவ்வழக்கானது 1 முதல 3 வாதிகள் இ.ம.எண்.514/2016 மனுவானது வழக்கு தாக்கல் செய்யப்பட்ட உடன்கால் தாக்கல் செய்யப்பட்டு, பொது மக்களுக்கான அறிவிப்பாக தினசரி நாழிதல் மற்றும் தண்டோரா (Dom Dom) மூலம் அறிவிப்பு செய்ய உத்தரவிடப்பட்டு, மேற்படி இரண்டு முறைகளும் கடைப்பிடிக்கப்பட்டதால் கடந்த 16.09.2016 அன்றே இம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வாதிகளின் பிரதிநிதித்துவத்தினை பிரதிவாதிகள் மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதால், மேலும் வாதிகளின் தகுநிலையினை பரிசீலிக்கையில், இவ்வழக்கானது நாடார்கள் மாசிமலையான் கோவிலின் குடிபாடுகளின் பிரிதிநிதிகள் என்ற கோதாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் நாடார்கள் இன சமூகத்தினை சேர்ந்தவர்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் வாதிகள் தரப்பில் எழுத்துபூர்வமான ஆதாரங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:14:06 +0530

27. உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 8ன் கீழ் பலதரப்பட்ட நபர்கள் வழக்கில் அக்கறை கொண்டு இருக்கும்பொழுது அவர்களுக்காகாக ஒருத்தரையோ அதற்கு மேற்பட்டவர்களை சேர்த்து வழக்கு அனுமதிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. வாதிகளின் பங்காளிகள், குடும்பத்தார்கள் தாவாவிற்கு சம்மந்தப்பட்ட கோவிலை வழிபடும் நபர்கள் என்பதும் பி.வா.சா.1 26.11.2025ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். இவ்வழக்கானது, தாவாச்சொத்தில் உள்ள வாதிகள் இன மக்களின் குலதெய்வமான மாசிமலையான் என்ற தெய்வ உருவவழிபாடு சம்மந்தப்பட்ட இறைவழிபாடை தொடர்புடையதாக காணப்படுகிறது. எனவே, இறைவன் என்பது சட்டத்தின் பார்வையில் இளவர் ஆவார். எனவே, மனித பிரதிநிதித்துவம் இன்றி வழக்கு தொடுக்க இயலாது என்பதால் வாதிகள் தாவா நிலத்தில் இறைவழிபாடு செய்து அனுபவம் செய்து வருவதாக கூறியிருப்பதால் வாதிகள் அக்கறையுள்ள பக்தர்கள் ஆவார்கள் என்பதாலும், மேலும் விதி 2ன் கீழ் சொல்லப்பட்ட நடைமுறைகளை வாதிகள் பின்பற்றியதாலும், இ.ம.ண்.514/2016ல் கடந்த 16.09.2016ம் தேதியிட்ட உத்தரவின்படி பிரதிநிதித்துவ மனு அனுமதிக்கப்பட்டதால் வாதிகள் இவ்வழக்கினை நடத்த உரிமையுள்ள நபர்கள் என இந்த எழுவினாவிற்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

28. <u>எழுவினா 2</u>

**வாதிகளுக்கு தாவாப்படி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:-**

வா.சா.1 தாவாச்சொத்திற்கான சர்வே எண்.294/94ல் வாதிகளின் முன்னோர்கள் சுமார் 80 ஆண்டுகளுக்கு மேலாக தெய்வங்கள் வைத்து வழிபாடு செய்து வந்ததாலும், நானும், எனது பங்காளிகளும் கெடாவெட்டி, பொங்கல் வைத்து பூஜை செய்வது வழக்கம். இருப்பினும் தாவாச்சொத்தில் கோவில் கட்ட வசதி ஏற்படவில்லை. ஆனால் குலவழிபாட்டை தவறாக நடத்தி வருகிறோம். சுமார் 80 ஆண்டுகாலமாக தெய்வ வழிபாடு செய்து வருகிறோம். அதற்கான ஆவணங்கள் இல்லை என வாதிகளுக்கும், தாவா கோவிலுக்கும் உள்ள தொடர்பை பொருத்து சாட்சியமளித்துள்ளார்.

29. வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட வா.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்களின் நான்கெல்லை விவரத்தில் தாவா

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:14:15 +0530

கோவில் குறிப்பிடப்பட்டுள்ளதால் இந்த ஆவணங்கள் வாதிகள் தரப்பு வழக்கிற்கு வலுசேர்க்கிறது எனவும், வாதிகளின் இ.ம.எண்.515/2016 தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் மாண்புமிகு துறையூர் சார்பு நீதிமன்றம் மேல்முறையீட்டு வழக்கு விசாரணை CMA No.3/2017 அனுமதிக்கப்பட்டு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பி.வா.சா.1 குறுக்கு விசாரணையில், தாவா கோவிலை ஒப்புக்கொண்டுள்ளார். ஆக்கிரமிப்பு செய்யவில்லை என தெரிவித்துள்ளார். வருவாய்த்துறை ஆவணங்களில் தாவாச்சொத்து காலிமனையாக இருந்தபோதிலும், கோவில் இல்லை என கூறமுடியாது என வாதிகள் தரப்பு வாதுரையினை அவ்வளவு எளிதில் புறந்தள்ள இயலாது.

30. இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை வழக்கு என்பதால், தாவாச்சொத்தில் வாதிகள் வழக்கில் கூறியபடி மாசிமலையான் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றோ, அல்லது மாசிமலையான் இறை தாவாச்சொத்தில் அனுபவத்தில் உள்ளது என்றோ அல்லது தாவாச்சொத்தில் மாசிமலையான் இறைவனுக்கு வாதிகள் கூறியபடி பூஜை, புணஸ்காரங்கள் செய்து இறை வழிபாட்டை கடந்த 80 ஆண்டு காலமாக முன்னோர்கள் மற்றும் வாதிகள் தொடர்ந்து அனுபவம் செய்து வருகிறாரா என்பதை வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

31. பிரதிவாதிகள் தரப்பில் தாவாச்சொத்தானது காலிமனை என அரசு ஆவணங்களில் காணப்படுவதாகவும், வாதிகள் கூறியபடி மாசிமலையான் கோவில் என அரசு வருவாய்த்துறை ஆவணங்களில் காணப்படவில்லை என்றும், இந்த கூற்றை நிரூபிக்கும் வகையில் வாதிகள் தரப்பில் எந்த ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. தாவாச்சொத்திற்கான அ பதிவேடு போன்று வருவாய்த்துறை ஆவணங்கள் இருதரப்பிலும் குறியீடு செய்யப்படவில்லை. வா.சா.ஆ.10 புலப்படம் மட்டுமே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் வருவாய்த்துறை ஆவணங்கள் யார் பெயரில் தாக்கலாகி உள்ளது என்பது வழக்கில் தெளிவாக இல்லை.

32. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதற்கு வாதிகள் தாவாச்சொத்தில் நிலைநிறுத்தப்பட்ட அமைதியான அனுபவத்தில் உள்ளார் என்பதை நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். எனவே,

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:14:24 +0530

வாதிகள் வழக்குரைப்படி தாவாச்சொத்தில் கோவில் இருப்பதாகவும், அந்த கோவிலை தாங்கள் வழிபடுவதாகவும், இவ்வாறு வழிபாட்டிற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்யும் வண்ணம் தாவா கோவில் உள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்து, இடையூறு செய்வதை இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 102ன் கீழ் வாதிகள் நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

33. தாவாச்சொத்து இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டபடி காலிமனையாகும். ஆனால் வாதுரையில் ஒரு பெரிய அரசமரமும், சிறிய வடிவிலான பதிவும் மாசிமலையான் தெய்வத்திற்காக வாதிகள் மற்றும் பங்காளிகள் சாமிகும்பிட்டு, கெடா வெட்டி, பொங்கல் வைத்து பூஜை செய்து வருகிறோம் என்றும், வா.சா.1 குறுக்கு விசாரணையில், அது கோவில் நிலமாகும் என்றும், மலை மற்றும் மரங்கள் விழுந்து உடைந்துவிட்டது, தற்பொழுது இரண்டு வேல் மற்றும் ஒரு கத்தி உள்ளது என்றும், மேலும் வா.சா.2 குறுக்கு விசாரணையில், வேல்கம்பு, அறுவால் கத்தி, மணி ஆகியவைகளை வைத்து சுமார் 1 அடி உயரத்தில் லிங்கம் வைத்து சாமி கும்பிட்டு வருகிறோம் என சாட்சியமளித்துள்ளார். இதனை பிரதிவாதிகள் மறுத்துள்ள போதிலும், பி.வா.சா.1 26.11.2015 ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில், தாவா இடத்தில் 2,3 ஆண்டுகளாக பூஜை நடைபெற்று வருகிறது..... முன்பெல்லாம் கிடையாது. ஆனால் 3 ஆண்டுகளாக செய்து கொண்டு வருகிறார்கள்...... மேலும் தற்பொழுது வாதிகள் சாமி கும்பிட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என பி.வா.சா.1 தற்பொழுது வாதிகள் தாவா இடத்தில் சாமி கும்பிட்டு இறை வழிபாடு செய்து வருகிறார்கள் என ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

34. இவ்வழக்கில் முக்கிய பொருளாக இருப்பது, வருவாய்த்துறை ஆவணங்களில் காலிமனை என காட்டப்பட்டதாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நிலையில், தாவாச்சொத்து வாதி கூறியபடி மாசிமலையான் கோவிலில் அல்லது இறைவழிபாடு நடந்து வருகிறதா? என்பதேயாகும். பிரதிவாதிகளின் இக்கூற்றை கடுமையாக மறுத்துள்ள போதிலும், வாதிகள் தரப்பில் வருவாய்த்துறை ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட வா.சா.ஆ.1 முதல் வா.சா.–9 ஆவணங்களில் தாவாச்சொத்திற்கு அருகில் உள்ள நிலங்களின் ஆவணங்கள் ஆகும். இந்த ஆவணங்களில் வாதிகள் கூறியபடி, தாவாச்சொத்தை நான்கெல்லை விவரத்தில் காண்பித்துள்ளார்கள்.

T ANBU

Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:14:35 +0530

| **வரிசை எண்.** | **ஆவண எண் மற்றும் தேதி** | **நான்கெல்லை விவரத்தில் குறிப்பிட்டுள்ள திசை** | **தாவாச்சொத்து குறிப்பிடப்பட்டுள்ள விதம்** |
|---|---|---|---|
| 1 | ஆ.எண்.626/1997 தேதி 02.05.1997 | நாடார்கள் மாசிமலையான் கோவிலுக்கு கிழக்கு | நாடார்கள் மாசிமலையான் கோவில் |
| 2 | ஆ.எண்.1469/1975 தேதி 18.11.1975 | நாடார்கள் மாசிமலையான் கோவிலுக்கு கிழக்கு | நாடார்கள் மாசிமலையான் கோவில் |
| 3 | ஆ.எண்.310/1971 தேதி.05.03.1971 | நாடார்கள் மாசிமலையான் கோவிலுக்கு கிழக்கு | நாடார்கள் மாசிமலையான் கோவில் |
| 4 | ஆ.எண்.1794/1966 தேதி.09.09.1966 | மாசிமலையான் கோவிலுக்கு வடக்கு | மாசிமலையான் கோவில் |
| 5 | ஆ.எண்.160/1955 தேதி.07.03.1955 | மாசிமலையான் கோவிலுக்கு வடக்கு | மாசிமலையான் கோவில் |
| 6 | ஆ.எண்.2466/1969 தேதி.06.12.1969 | மாசிமலையான் கோவிலுக்கு வடக்கு | மாசிமலையான் கோவில் |
| 7 | ஆ.எண்.597/1960 தேதி.25.04.1960 | மாசிமலையான் கோவிலுக்கு வடக்கு | மாசிமலையான் கோவில் |
| 8 | ஆ.எண்.198/1962 தேதி.15.02.1962 | சாணார் கோவிலுக்கும், எங்கள் கூரைவாரிக்கும் | சாணார் கோவில் |

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:14:43 +0530

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கு | |
| 9 | ஆ.எண்.98/1937<br>தேதி.13.10.1937 | சானார்<br>கோவிலுக்கும்,<br>மேற்கு | சானார் கோவில் |

35. பி.வா.சா.2 09.03.1926 ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில் நாடார்கள் என்பதும் சாணார்கள் என்பதும் ஒரே இனத்தைத்தான் குறிப்பிடும் என்று சொன்னால் சரிதான் என ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். வா.சா.ஆ. 1 முதல் 7 ஆவணங்களின் கட்டுப்பட்ட சொத்துக்களின் நான்கெல்லை விவரத்தில் வாதிகள் கூறியபடியே மாசிமலையான் கோவில் எல்லை விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்ற ஆவணங்களில் சானார் கோவில் என குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டும் ஒன்றுதான் என பி.வா.சா.2 ஒப்புக்கொண்டுள்ளார்.

36. பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் 9 ஆவணங்கள் குறியீடு செய்யும்போது இரண்டாம் நிலை ஆவணங்கள் என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இந்த ஆவணங்கள் மூன்றாம் நபருக்கு சொந்தமான ஆவணங்கள் ஆகும். மேலும், இந்த ஆவணங்கள் முறையான பாதுகாவலர் அதாவது உப்பிலியபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து அசல் ஆவணங்களுடன் ஒப்பிடப்பட்டு சான்றொப்பம் இட்டு வழங்கப்பட்ட ஆவணங்கள் என்பதால், இந்த ஆவணங்கள் சான்றாவணங்கள் என ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

37. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் எழுத்துமூல வாதுரையில் இந்த ஆவணங்களைப் பொருத்து சந்தேகம் எழுப்பி எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. பி.வா.சா.1 குறுக்கு விசாரணையில், வா.சா.ஆ.1 ஆவணத்தின் நான்கெல்லை விவரத்தில் சர்வே எண்.294/95 க்கு நான்கெல்லையாக நாடார் கோவில் வீட்டிற்கு தெற்கு, நாடார் மாசிமலையான் கோவிலுக்கும் கிழக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் என்றும், மாசிமலையான் கோவில் நான் குடியிருக்கும் கோவிலுக்கு மேற்கு பக்கம் உள்ளது என்று சொன்னால் சரிதான் என ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் சர்வே எண்ணை மறுத்துள்ளார். மேற்கண்ட ஆவணங்களில் வயதில் மூத்த ஆவணமான

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.15 19:14:52 +0530

வா.சா.ஆ.9 ஆவணத்தில் சானார் கோவில் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டது 1937 ஆண்டு ஆகும். அப்பொழுது சானார்கள் கோவில் என குறிப்பிடப்பட்டுள்ளதும், இறுதியாக பி.வா.சா.2 குறுக்கு விசாரணையில் வா.சா.ஆ.5 ஆவணத்தில் நான்கெல்லை விவரத்தில் கோவில் நிலத்திற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், 2024ம் ஆண்டு கிரையம் பெற்ற ஆவணத்திலும் கிரையச்சொத்தானது, தாவாச்சொத்திற்கு வடபுறம் என நான்கெல்லை விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துவிட்டு, ஆனால் முந்தைய கிரைய ஆவணங்களைப் பார்த்து அப்படி எழுதிவிட்டார் என சாட்சியமளித்துள்ளது ஏற்றுக்கொள்ள இயலாது. இவ்வழக்கு 2016ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு சுமார் 8 ஆண்டுகள் கழித்து மேற்படி ஆவணம் எழுதப்பட்டுள்ளது.

38. இவ்வழக்கானது, தாவாச்சொத்தில் உள்ள இறைவழிபாட்டினை தடை செய்யாவண்ணம் வாதிகளின் வழிபாட்டு உரிமை மற்றும் பிரதிவாதிகள் தாவாச்சொத்தை ஆக்கிரமிப்பு செய்யாமல் இருப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மேலே சொல்லப்பட்ட வா.சா.ஆ.1 முதல் 9 ஆவணங்களில் தாவாச்சொத்தில் சானார் கோவில், மாசிமலையான் கோவில் இருந்தது என்றும், அதனை ஏற்றுக்கொண்ட மூன்றாம் தரப்பினாக ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.1 முதல் 9 ஆவணங்கள் காணப்படுகிறது. இவைகள் இயற்கையாக நடைமுறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதாலும், மேற்படி ஆவணங்களின் நான்கெல்லைப் பொருத்து முழுமையாக ஏற்றுக்கொள்ளவேண்டியுள்ளது.

39. தாவாச்சொத்து வருவாய்த்துறை ஆவணங்களில் காலிமனையாக இருந்தபோதிலும் தற்பொழுது வரை வாதி மாசிமலையான் கோவில் பெயரிலோ, அல்லது பிரதிவாதிகள் பெயரிலோ அல்லது மூன்றாம் தரப்பினர்கள் பெயரிலோ அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டதாக இல்லை. மேலே சொல்லப்பட்ட வாதிகளின் சாட்சியங்கள் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 ஆவணங்களின் அடிப்படையிலும், பி.வா.சா.1 ஒப்புக்கொள்ளப்பட்டவாறு, வாதி நாடார் மாசிமலையான் கோவிலுக்கும் கிழக்கே என வா.சா.ஆ.1 ஆவணத்திலும் குறிப்பிட்டுள்ளது. எனவே, தாவாச்சொத்தில் வாதி

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:15:01 +0530

கோவில் நாடார்கள் மாசிமலையான் கோவில் அமைந்திருப்பது என்பதை நம்பவேண்டியுள்ளது.

40. பி.வா.சா.1 குறுக்கு விசாரணையில் நான் குடியிருக்கும் தெரு வழியாக இறந்த பிணங்களை அடக்கம் செய்ய எடுத்துச்செல்லும்போது என் வீட்டிற்கு அருகில் செல்லும்போது மேலங்கள் அடிக்கமாட்டார் என்று சொன்னால் தற்பொழுது அடிப்பது கிடையாது. ஆனால் அப்போது அடிப்பார்கள். குறிப்பாக 26.11.2025ம் தேதியிட்ட குறுக்கு விசாரணையில் தாவாச்சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றாலும், ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் சரிதான் என ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், குறுக்கு விசாரணையின் தொடர்ச்சியாக உத்தரவு கிடைத்தவுடன் அன்றைய தினமே நாங்கள் தாவாச்சொத்திலிருந்து காலி செய்துவிட்டோம், உத்தரவிற்கு பிறகு தாவாச்சொத்தில் நாங்கள் இருந்தோம், வாதிகள் காவல்துறையில் புகார் அளித்து காவல்துறையினர் வந்தபிறகு தான் தாவாச்சொத்திலிருந்து காலி செய்தோம் என்று சொனனால் சரியல்ல என மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தினால் CMA.No.3/2017ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு பிறகு நடந்த சங்கதி பற்றி சாட்சியமளித்துள்ளார். மேலும் குறுக்கு விசாரணையில், என்னை தாவா இடத்திலிருந்து காலி செய்ய சொன்னவுடன் அன்றைய தினமே காலி செய்துவிட்டேன், வழக்கு வாதி கூறியபடி தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னால் சரிதான், சாட்சி மீண்டும் அரசாங்கத்திற்கு சொந்தமான இடம் என்று சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரிய வழக்கு அல்ல. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கு. அரசாங்கத்தினரை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பாதிக்காது.

41. வா.சா.ஆ.11 காவல்துறையில் வாதிகளால் கொடுக்கப்பட்ட புகாராக காணப்படுகிறது. எனவே, தாவாச்சொத்தில் மாசிமலையான் கோவில் இருப்பதால், பத்தி 34ன் இறுதியில் கூறியவாறு அந்த கோவிலுக்கு வாதிகள் பூஜைகள், புனஸ்காரங்கள் செய்து வந்துள்ளார்கள் என்பதையும் நம்பவேண்டியுள்ளது. பிரதிவாதிகளும் ஒரே இனத்தவர்களை சேர்ந்தவர்கள் என்றாலும் பிரதிவாதிகளுக்கு தனி குலதெய்வம் உள்ளது. எனவே, வாதிகளுக்கு தாவாச்சொத்தில் உள்ள மாசிமலையான் கோவிலை வழிபாடு செய்ய உரிமையுண்டு. அந்த உரிமையினை, பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்தோ, கட்டிடம்

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:15:10 +0530

கட்டியோ இடையூறுகள் ஏற்படுத்தினால் வாதிகள் உரிமைக்கு ஊறு விளைவிக்கும் என்பதால் வாதிகள் கோரியபடி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி இந்த எழுவினாவிற்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

**42. எழுவினா. 3**

வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரம் என்ன? என்பதைப்பற்றி பரிசீலிக்கையில்:–

எழுவினாக்கள் 1,2 ஆகியவற்றிற்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ளதால், வேறு எந்த பரிகாரங்களும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்படுகிறது. வாதிகள் தாவாச்சொத்தில் உள்ள நாடார்கள் மாசிமலையான் கோவிலை சாமி கும்பிட்டுக்கொண்டு அனுபவம் செய்துவருவதை பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, வாரிசுகளோ தாவாச்சொத்தை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டவோ, வீடு கட்டவோ அல்லது வேறு வகையிலோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் படித்துப்பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 15ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தின் முன் அவையறிய பகரப்பட்டது.

T ANBU
Digitally signed by T ANBU
Date: 2026.06.15 19:15:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
துறையூர்.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 தியாகராஜன்
வா.சா.2 பன்னீர் செல்வம்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்.**

| ஆவண எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.05.1997 | 1ம் பிரதிவாதி நாகமையா செட்டியார் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 18.11.1975 | முருகேசன், நாகமையா செட்டியாருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 05.03.1971 | தனம் ஆசாரி, மீனாட்சியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 09.09.1966 | ஆறுமுகம், அமிர்தம்மாளுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 07.03.1955 | ஆறுமுகம் பிள்ளை வகையறா ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 06.12.1969 | ராமராஜ் ரெட்டியார், காளியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 25.04.1960 | சுப்பிரமணி ஆசாரி, ராஜகோபால் ரெட்டியாருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.15 19:15:33 +0530

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.8 | 15.02.1962 | முத்து வரதராஜுலு ரெட்டியார் அவரது பேரனுக்கு எழுதிவைத்த இனாம் சாசனம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.9 | 13.10.1936 | வரதராஜு ரெட்டியார், முத்து வரதராஜுலு ரெட்டியாலுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.10 | – | நத்தம் சர்வே எண்.294 க்கான புலப்படம் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.11 | 24.07.2013 | 1ம்பிரதிவாதி மீது, வா.சா.2 புகார் கொடுத்ததற்கான மனு ரசீது | அசல் |
| வா.சா.ஆ.12 | – | தாவா இடத்தை காண்பிக்கக்கூடிய புகைப்படம் மற்றும் சி.டி. | அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்,</u>**

பி.வா.சா.1 நாகராஜ்

பி.வா.சா.2 செந்தில்குமார்.

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

இல்லை

T ANBU Digitally signed by T ANBU Date: 2026.06.15 19:15:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

துறையூர்.

Visit **ecourts.gov.in** for updates or download mobile app "**eCourts Services**" from Android or iOS